**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**ஐ ஏ 01/2023**

**ஐ.டி.ஓ.பி. எண். 63/2022**

**எ,ம.சா. 1**

நாள்: 21.12.2023 .

2023ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21ம் நாள் மனுதார்/எதிர்மனுதார் சாட்சியாகிய திரு. மோட்சம்வாஸ் என்பவரின் வாக்குமூலம் 1989 ஆம் ஆண்டு சட்டம் 44ம் விதி 4ம் பிரிவின்கீழ் திரு. எஸ். குமரகுரு, பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மோட்சம் வாஸ் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இம்மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

ஆவணங்கள்

1. எதிர்மனுதாரர் பரவர்நலப்பேரவை கொடுக்கப்பட்ட புகார் மனு அலுவலக காப்பி எ.ம.சா.ஆ.1,
2. அந்த புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை சம்மந்தமான கடிதம் எ.ம.சா.ஆ.2 ஆகும்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

பாம்பன் பரவர் நலப்பேரவையில் 02.03.2023ம் தேதி நான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதற்கு முன்பாக அந்த சங்கத்தில் பௌலி என்பவர் தலைவராக இருந்தார். அந்த பௌல் என்பவர் எதிர்மனுதாரருடைய சித்தப்பா ஆவார். முதன்முதலாக யார் மனுதாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. அந்த வழக்கு என்ன வழக்கு என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. தற்போது நான் சாட்சியம் அளிக்க வந்துள்ள வழக்கு என்ன வழக்கு என்று எனக்குத் தெரியாது. நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். பெனிஸ்வருக்கு அவருடைய பெற்றோருக்கு ஒரே மகன் ஆவார். அவர் குடும்பம் அவர் ஊரில் பெரிய வசதிபடைத்த குடும்பம் என்றால் அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அவர் சொந்தமாக இரண்டு லான்ச்சு வைத்து அதன் மூலம் நல்ல வருமானம் ஈட்டி வருகிறார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. பாம்பன் பகுதியானது கிராமப்பகுதி என்பதால் அந்த பகுதியில் வசிப்பவர்கள் ஒருவருக்கொருவர் உறவினர்களாக இருக்கலாம். நான் அந்த ஊரில் உள்ள சங்கத்தில் தலைவர் என்பதால் அந்த ஊரில் வசிப்பவரின் பொருளாதார நிலைமை குறித்து எனக்குத் தெரியும். மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மூலமாக இரண்டு ஆண் குழந்தை இருக்கும் விவரம் எனக்குத் தெரியும். திருமணத்திற்கு நான் சென்றுள்ளேன். எதிர்மனுதாரருக்கு மனுதாரர் மனைவி உறவு முறை வேண்டும் என்றும், திருமணத்தின்போது மனுதாரரின் தகப்பனார் எதிர்மனுதாரருக்கு 80 பவுன் நகை போட்டார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சனை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. பெனிஸ்டர்தான் விவகாரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த விவரம் அறிவிப்பை பார்த்தவுடன் தெரியவந்தது. எ.த.சா.ஆ.1 ஆனது இந்த மனுவிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் மனுதாரர் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துவிட்டு அதற்கு

நேர்விரோதமாக எங்கள் சங்கத்தில் சேர்த்துவைக்கக்கோரி விண்ணப்பம் கொடுத்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால்சரியல்ல. எ.த.சா.ஆ.2 இல் மேற்படி பெனிஸ்டர் எந்த தேதியில் மனு கொடுத்தார் என்ற தேதியை குறிப்பிடவில்லை, எதிர்மனுதாரர் எந்த தேதியில் மனு கொடுத்தார் என்று மனுவில் தேதிபோடவில்லை. எ.த.சா.ஆ.2 ஆனது பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் சங்கத்தில் மனு கொடுத்தால் பேச்சு வார்த்தை நடத்தி தீர்மானம் நிறைவேற்றி எதிர்மனுதாரருக்கு மனு அனுப்பி பின்னர் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்பது நடைமுறை என்றால் சரிதான். இந்த மனுவில் உள்ள மனுதாரரை எதிர்மனுதாரர் கொடுத்த மனுவின் பேரில் சம்மன் அனுப்பி வரவழைத்தோமா என்றால் இல்லை வாய்மொழியாக பேசி வரவழைத்தோம். நீதிமன்றத்தில் விவகாரத்து கோரி மனு தாக்கல் செய்துவிட்டு அதற்கு நேர்விரோதமாக எங்கள் சங்கத்தில் மனு கொடுத்தது நிலைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடைய உறவினர் எங்கள் சங்கத்தில் உறுப்பினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருடைய நகை மற்றும் 10 லட்சம் எதிர்மனுதாரரிடம் உள்ளது என்றம், அதை பெற்று மனுதாரரிடம் ஒப்படைக்க நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கொடுக்கவேண்டிய ஜீவனாம்ச தொகையை கொடுப்பதிலிருந்து தப்பிப்பதற்காக எங்கள் சங்கத்தில் மனு கொடுத்துவிட்டு அதற்காக நான் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றும், அதனால் என் சாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. குடும்ப பிரச்சனை எதனால் ஏற்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. எதிர்மனுதாரர் மீது மனுதாரர் சகோதரி கொடுத்த வழக்கு சம்மந்தமாக புகார் பதியப்பட்டு அது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எதிர்மனுதாரர் சொல்லிக்கொடுத்து நான் தற்பொழுது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .